முருகப்பெருமான் துணை

**மகான் ஜமதக்னி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.06.2023**, வெள்ளிக்கிழமை

1. தவராஜனே ஞான தேசிகா
தரணிவெல்ல அவதாரம் எடுத்த
அவதார ஆறுமுக அரங்கனே
அய்யனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
குறைவிலா மூவைதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் **15** ம் தேதி, **30.06.2023**, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு ஜமதக்னி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் ஞானி
ஞானமே உலகை வெல்லும்
ஞானிகளாக உலக மாற்றம்
4. மாற்றம் கொள்ளும் சக்திகளாக
மக்களை எல்லாம் தேற்றும்
ஆற்றல்மிக்க தருமநெறி
அனைவரும் பின்பற்ற அருளி
5. அருளி காத்துவரும் அரங்கன்
ஆன்மீக ஞான வழியை
அருள்பலமாக ஏற்று மக்கள்
அகிலமதில் சரணடைந்து வர
6. வருகவே வையகம் தானும்
வள்ளல் தன்மை கொண்ட
பெருமைமிக்க உலகமாக
பேருலகம் மாற்றம் காணும்

7. காணவே உலகமாந்தர்கள்
கருணைமிக்க கிளைகளை
தான தருமம் பெருக்கும் வண்ணம்
தரணியில் சேவை நோக்கில் அமைத்து

8. அமைத்து இன்னும் தருமம்
அளவிலா வளர்த்து வருக
நேமமுடன் எங்கும் தருமம்
நிலமதனில் தருமவான்கள் படை

9. படைபெருகி ஞானத்தலைமை
பழுதில்லா உலகம் எங்கிலும்
சோடை வெல்லும் வண்ணம்
சுருதிபடி அமைந்து மாற்றம்

10. மாற்றம் ஞான ஆட்சியாக
மண்ணுலகம் கண்டு சிறக்கும்
ஆற்றல்பட கலித்துன்பங்கள்
அகன்றுமே அரங்கன் ஆசியால்

11. ஆசியால் அனைத்தும் நல்ல
ஆளுமை ஞான பலமாக
வாசிவென்ற தலைவர்கள் துணைபட
வையகம் மாற்றம் காணும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—